**காத்தான்குடி நகர சபை**
**மட்டக்களப்பு மாவட்டம்**
-------------------------------------

1 நிதிக்கூற்றுக்கள்
--------------------

1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்
---------------------------------------

2015 ஆம் ஆண்டு நிதிக்கூற்றுக்கள் 2016 மார்ச் 03 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததோடு கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 29 இல் சபையின் செயலாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்
--------------------------------------

இந்த அறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினை தவிர்த்து காத்தான்குடி நகர சபையின் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும், காசோட்டத்தினையும், பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக்கூற்றுக்களின் மீதான கருத்துரைகள்
------------------------------------------------

1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்
---------------------------------

நிலையான வைப்புக்களில் வைப்புச் செய்யப்பட்ட ரூபா 4,000,000 தொகைக்கு மீளாய்வாண்டு வரைக்கும் வழங்கப்பட்ட வட்டி ரூபா 1,471,241 கணக்குகளிற்கு கொண்டு வரப்பட்டிருக்கவில்லை.

1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்கு
---------------------------------------------------------

பேரேட்டின் படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ஊழியர் கடன் கணக்கு மீதி ரூபா 3,637,758 ஆகக் காணப்பட்ட போதிலும் பதவியினர் கடன் பதிவேடுகளின் படி அத்திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 3,736,008 ஆகக் காணப்பட்டதால் ரூபா 98,250 தொகையான வேறுபாடு கணக்கிணக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை.

1.3.3 செலுத்த வேண்டிய கணக்குகள்
---------------------------------------

நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு செலுத்த வேண்டிய ரூபா 6,642,880 நீர் விநியோகக் கொடுப்பனவை கடந்த 21 வருடங்களுக்கு மேலாக கொடுத்துத் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாது தொடர்ச்சியாக நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டு வருகின்றது.

1.3.4 சட்டங்கள், விதிகள், மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மை
------------------------------------------------------------------------------------------

நகரசபைகள் கட்டளைச் சட்டம் அத்தியாயம் 255 பிரிவு 177(2) இன் பிரகாரம் 2014 ஆம் ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் சுருக்கத்தை அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு 2015 திசெம்பர் 31 ஆந் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2 நிதி மீளாய்வு
----------------

2.1 நிதி விளைவுகள்
--------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுகளின்படி 2015 திசெம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினங்களிலும் கூடிய வருமானம் ரூபா 17,128,498 ஆக இருந்ததுடன் ஒப்பிடுகையில் முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவீனங்களிலும்

கூடிய வருமானம் ரூபா 12,602,309 ஆக இருந்தமை நிதி விளைவுகளில் ரூபா 4,526,189 முன்னேற்றத்தைக் காட்டுகின்றது.

2.2 வருமான முகாமைத்துவம்

-------------------------------

2.2.1 சபைக் காணியை குத்தகைக்கு வழங்கல்

---------------------------------------------------

சபைக்குச் சொந்தமான 15 பேர்ச் அளவுடைய காணி ஒரு தனியாருக்கு மீளாய்வாண்டில் 02 வருட காலத்திற்கு பொருத்து (Paved Blocks) தயாரிக்கும் தொழிற்சாலையை நடாத்துவதற்காக அரசாங்க பிரதம மதிப்பீட்டாளரிடம் மதிப்பீட்டு அறிக்கை பெற்றுக் கொள்ளப்படாது ரூபா 7,500 மாதாந்த குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சின் பிஸ்/1/05/26 இலக்க 2009 திசம்பர் 14 ஆந் திகதிய கடிதத்திற்கு அமைய, காணியின் தற்போதைய பெறுமதியில் 25% ஆன தொகை ஆரம்பக் கொடுப்பனவாக பெற்றுக்கொள்வதற்குப் பதிலாக 3 மாத வாடகைப் பணமாகிய ரூபா 22,500 தொகை ஆரம்பக் கொடுப்பனவாக பெறப்பட்டிருந்தது.

3 செயற்பாட்டு மீளாய்வு

--------------------------

3.1 முகாமைத்துவ பலவீனம்

------------------------------

2012 ஆம் ஆண்டு ஓய்வுபெற்ற இரண்டு உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 35,376 கடன் மீதியை ஓய்வூதியத்திலிருந்து அல்லது பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கு 2015 திசெம்பர் 31 வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

3.2 திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவம்

----------------------------------------------

2010 - 2015 காலப்பகுதியில் பிலிசறு நிதி மூலமாக திண்மக் கழிவுகளை மீள் சுழற்சி செய்வதற்காக ரூபா 8,394,227 செலவில் மீள்சுழற்சி நிலையம் அமைக்கப்பட்டிருந்தும் திண்மக்கழிவுகள் ஆற்றங்கரையில் கொட்டுப்பட்டு வந்ததனால் நீதிமன்ற தீர்ப்பின் படி 2015 மே 28 ஆந் திகதியிலிருந்து ஆற்றங்கரையில் திண்மக்கழிவுகளைக் கொட்டுவதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது. எனினும் சபையினால் தொடர்ச்சியாக குப்பைகள் ஆற்றங்கரைகளில் கொட்டப்பட்டு வருவதனால் சூழல் மாசடைவதுடன் பல்வேறு தொற்று நோய்கள் பரவுவதற்கும் காரணமாக அமைந்தது.

4. கணக்களிபொறுப்பும் நல்லாளுகையும்

----------------------------------------------

4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

---------------------------

பாதீடு செய்யப்பட்ட செலவினத்திற்கும் உள்ளபடியான செலவினத்திற்கும் இடையில் 16% தொடக்கம் 57% வரையான முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடானது முகாமையின் ஒரு வினைத்திறனான கட்டுப்பாட்டுக்கருவியாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

5 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------

கீழ்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) ஒப்பந்த நிர்வாகம்
(இ) நிலையான சொத்துக் கட்டுப்பாடு
(ஈ) வருமான முகாமைத்துவம்
(உ) பாதீட்டுக் கட்டுப்பாடு